# நினைவு மலர்

உ
சிவமயம்



அமரர்

## திருமதி. பரமேஸ்வரி மகேந்திரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு மலர்

**12.09.1999**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்: 17.05.1938 மறைவு: 29.08.1999

அமரர்

# திருமதி. பரமேஸ்வரி மகேந்திரன்

மானிப்பாய் தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு.

சைவமும் தமிழும் செழிப்புற்று ஓங்கும் ஈழத் தமிழ்த் திரு நாட்டின் வடபால் அமைந்த வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு அணிசேர்த்து மணியெனத் திகளும் அராலிக் கிராமம் பழமை வாய்ந்த வரலாறுகளையும் சிறப்புக்களையும் கொண்டது. இக்கிராமம் இலங்கை முழுமைக்கும்மே பல கலைகளையும், வித்தைகளையும், சாஸ்திரவித்தகர்களையும் பல் துறை வைத்தியர்களையும், தத்துவஞானிகளையும், பெரு வர்த்தகர்களையும், புதைபொருள் ஆராச்சி வித்தகர்களையும் உருவாக்கி அளித்து சிறப்புப் பெற்றது.இக்கிராமத்தில் தலை சிறந்த பல ஆலயங்கள் உண்டு. இதில் அராலி தெற்கில் கரப்பிட்டி பிள்ளையார் கோவிலும் ஒன்று. இவ்வாலயத்தை அராலி புனித பூமியில் ஸ்தாபித்து திறம்பட நிர்வாகம் செய்து வந்தவர்களின் நேரடி வழித்தோன்றலாக 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து அராலியில் சிறப்புடன் இருந்தவர் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள் ஆவார். இவர் தன் வாழ்கைத் துணைவி அமரர் சேதுப்பிள்ளை அவர்களுடன் இயற்றிய இல் வாழ்வின் தவப்பயனால் அவர்களுக்கு சிதம்பரப்பிள்ளை என்னும் புத்திரன் அவதரித்தார்.

அமரர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் சிறுவயது முதலே பல் கலைகளையும் கற்று காரிய சித்தியும் தொழில் விருத்தியும் கைவரப் பெற்றவராக உயர்ந்த வாழ்வொற்றைக் குறிக்கோளாக கொண்டவராக விளங்கினார். தமது பரம்பரைக் குல தெய்வமான கரப்பிட்டி பிள்ளையார் கோவில் நிர்வாகத்தையும் தன் தந்தையார்க்கு உதவியாக நிர்வாகித்து வந்தார். இவர் நல்ல தொழில் வாய்ப்பு வேண்டி இலங்கையில் மத்தியில் மலைப் பாங்கில் அமைந்த பதுளையில் தெல்பத்தை தோட்டத்தில் தேயிலை உற்பத்தியாளராக (Tea maker) பதவியைப் பெற்று சிறப்பாக கடமையாற்றி பல மட்டத்திலும் நல் பெயர் சம்பாதித்தார். அமரர் சிதம்பரப்பிள்ளை அவர்கள். உரிய பருவத்தில் அமரர் பார்வதி என்னும் நல்லாளை மணம் செய்து ஏழு சற்புத்திர பாக்கியங்களை பெற்றெடுத்தார். பதுளை நகரம் வியாபார மேம்பாட்டுக்கு சிறந்த களம் எனக் கண்டு கொண்ட அமரர் சிதம்பரமப் பிள்ளை அவர்கள் பல்வேறு வியாபார முயற்சிகளையும் ஆரம்பித்து மிகக்குறுகிய காலத்திலேயே பெரும் தனவந்தராக விளங்கினார். இவர் நிர்வாகத் திறமையை பதுளையிலும் அதே நேரம் அராலி கரப்பிட்டி பிள்ளையார் கோவிலை தந்தையார்க்கு பின் நிர்வகித்தலிலும் உலகு அறிந்தது.

அமரர் சிதம்பரப்பிள்ளை அமரர் பார்வதி அவர்களின் மூன்றாவது பெண்ணாக அவதரித்தவர் தான் எமது வரலாற்று நாயகி அன்னை பரமேஸ்வரி மகேந்திரன் ஆவார், தந்தையாரின் மதி நுட்பம், செயல்திறன், விவேகம், வேகம், கருமத்தில் நம்பிக்கை இவற்றில் முழு உருவம் தான் அன்னை பரமேஸ்வரி என்றால் அது மிகையாகாது. அன்னை பரமேஸ்வரி அவர்களுடன் சகோதரங்களாக திருமதி. இரத்தினம்,திருமதி மகேஸ்வரி, திருமதி. சரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சிவராஜசிங்கம், திருமதி. புவனேஸ்வரி, திருமதி. ஞானேஸ்வரி ஆகியோரும் விளங்கினார்கள்

1938ம் ஆண்டு வைகாசி மாதம் 17ம் திகதி பதுளையில் பிறந்த அன்னை பரமேஸ்வரி அவர்கள் தனது கல்வியை பதுளை கன்னியர் குடும்ப மடத்தில் கற்றார் பதுளைப் பகுதியில் பல கல்வி மான்களையும் சான்றோர்களையும் உருவாக்கிய கன்னியர் குடும்ப மடக் கல்வி நிலையம் அன்னை பரமேஸ்வரியாலும் பெருமை பெற்றது. மேலதிகப் படிப்பு படித்து தன் அறிவையும் துறையையும் மேம்படுத்த விரும்பிய அன்னை பரமேஸ்வரி மனையியலில் டிப்பிளோமாவும், வயலின், தையற்கலை, சித்திரம் என்னும் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

பள்ளி பருவத்தில் அன்னாரின் தாயார் சிவபதமடைந்து விட்டார். தந்தையார் தனி ஒருவராக தன் பிள்ளைகள் ஏழுவரையும் வளர்த்து ஆளாக்க வேண்டியதுடன் விரிவடைந்திருந்த வியாபார முயற்சிகளை நிர்வகிக்க வேண்டியும் ஏற்பட்டது. இந்நேரத்தில் தன் சிறு வயதில் அன்னை பரமேஸ்வரி தன் திறமையையும் ஒதத்துழைப்பையும், தன் தந்தையார்க்கு நல்கி வியாபார ஸ்தாபனங்களை நிர்வகித்தும் தன் சகோதரங்களை நன்கு கவனித்தும் வந்தார். அன்னாரின் நிர்வாகத்திறமைக்கும் , தொழில்நுட்ப இயற்கை அறிவிற்கும் இன்றுவரை உதாரணமாக இருப்பது பதுளை 'மையங்கன' றோட்டில் உள்ள 'கணேச வாச' என்னும் மாளிகை ஆகும். தெல்வத்தை எஸ்டேட்டில் பெரிய அளவில் பண்ணைகளை உருவாக்கி தளராத மனதிற்கும், சுறுசுறுப்புற்கும் உதாரணப் பெண்ணாகத் திகழ்ந்தார்.

அன்னாரின் மூத்த பெண் சகோதரங்கள் உரிய காலத்தில் விவாகப் பேறு பெற்றதன் மேல் 1963ம் ஆண்டு மானிப்பாய் என்னும் நகரின் தென் பகுதியில் சீரும் சிறப்புடனும் பலரால் அறியக் கூடியதாய் வாழ்ந்து வந்த காலால் பகுதியில் உயர் பதவி வகித்து வந்த அமரர் துரைரத்தினம் அவர்களின் புத்திரனும் நில அளவையாளருமான திரு. து. மகேந்திரன் அவர்களைப் பெரியோர் பலரின் முயற்சியால் விவாகம் செய்தார்.

இவர்களது இல்வாழ்வு பதுளை நகரில் ஆரம்பமானது. இவ்வாழ்வின் பயனாக அனுஷா, குலேந்திரன் சதீஸ்க்கரன் விஜயேந்திரன், சஞ்சிதா ஆகிய புத்திர பாக்கியங்கள் கிடைக்கப்பெற்று மனநிம்மதியுடன் வாழ்ந்தார்கள். இக்காலத்தில் பிள்ளைகளை வளர்த்து நன் நிலைமைக்கு உருவாக்குவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் அன்னை பரமேஸ்வரி. ஒவ்வொரு பிள்ளைகளின் பள்ளிப் பாடங்களும் அன்னாருக்கு மனப்பாடம். பிள்ளைகள் ஒவ்வொரு பள்ளிக்கூட சோதனையிலும் சித்தியடைந்ததும் அடுத்த வகுப்பிற்கான பாடங்களை அவர் ஆயத்தம் செய்யத்தொடங்கிவிடுவார்.

இந்நாட்டில் 1977ம் ஆண்டில் ஏற்பட்ட இனங்களின் ஒற்றுமையின்மையினால் தங்கள் பதுளை வாழ்க்கையை மானிப்பாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றினார். யாழ்பாணத்தில் உள்ள தலைசிறந்த பள்ளிக்கூடங்களான சுண்டுக்குளி மகளீர் கல்லூரி, பரி. யோவான் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் பிள்ளைகளை கற்க வைத்தார். இக்கல்லூரிகளில் அனுமதி பெற யார் யாரை எப்படி அணுக வேண்டும்; எவ்வாறு அதற்கான நிதியை வழி செய்ய வேண்டும என்பதும்; அதை எவ்வாறு சாதிக்க வேண்டும் என்பதும்; அதன் பலனை பெற்று இன்று அவர்களின் பிள்ளைகள் உலகின் பல பாகங்களில் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதன் மூலம் அன்னாரின் திறமையை அறியலாம்.

1983ம் ஆண்டில் இந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் விளையப்போகும் எதிர்கால அனர்த்தங்களை முன்னுணர்ந்த அன்னார் தன் பிள்ளைகளை உரிய நேரத்தில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார். இவர்களில் மூத்த மகன் குலேந்திரனை இலண்டனுக்கும் தனது மூன்றாவது மகனை பிரான்ஸ் நாட்டிற்கும் இரண்டாவது மகனை அவர் தனக்கு உதவியாக ஒரு ஆண் பிள்ளையை வைத்திருக்க வேண்டும் என எண்ணி இருந்தும் அப்பிள்ளையின் பாதுகாப்பு ஒன்றையே மனதிற்கொண்டு அப்பிள்ளையின் உயர் கல்வியைக் கூட இடை நிறுத்தி இலண்டனுக்கு அனுப்பி வைத்தார்.

1987ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் கானல் நீரான சமாதானத்தின் பின் வந்த பதட்டத்தால் இளைய மகள் சஞ்சிதாவுடன் கொழும்பு வந்து வாழ்ந்தார். இக்காலத்தில் மகள் சஞ்சிதாவை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாக்கி பின் கனடாவில் திரு. பன்னீர் செல்வன் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து மனநிறைவு பெற்றார். 1995ம் ஆண்டு தன் இரண்டாவது மகனின் திருமணத்தின் பொருட்டு இந்தியாபோய் அவரை செல்வி வளர்மதி என்னும் நல்லாளுக்கு மனநிறைவுடன் முன்னின்று திருமணம் செய்து வைத்தார். கடந்த இரண்டு ஆண்டு காலமாக சிறிது நோய் ஏற்பட்டு படிப்படியாக அது முற்றிய நிலையில் கொழும்பில் தன் கணவரின் பராமரிப்பிலும் மகள் அனுஷா பேரன் சஞ்ஜீவனின் பாசத்துடனும் மேலும் அவரின் பெற்றெடுக்காத பிள்ளைகளான செல்வி இராஜேஸ்வரி, செல்வன் அருள்நேசன் ஆகியோரின் முகக்குறிப்பறிந்து செய்த பராமரிப்பிலும் வாழ்ந்து வந்தார்.

இக்காலத்தில் 1999 ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி அதிகாலை இவ்வுலகில் வாழ்ந்து உழைத்தது போதும் என்றே மனநிறைவு பெற்று தன் இனிய கணவர் பெறாமகள் இராஜேஸவ்ரியுடன் இருந்து பணிவிடை செய்ய நிம்மதியுடன் இறையடி சேர்ந்தார்.

அராலி தெற்கில் குல தெய்வமான கரப்பிட்டி பிள்ளையார் தொடக்கம் இலங்கை, இந்தியாவில் உள்ள பல திருக் கோயில்களை தரிசிக்கும் பாக்கியம் பெற்ற அன்னார் தெய்வ நம்பிக்கையுடன் சேவையாற்றி பல வெற்றிகளையும் அடைந்தமையால் இறுதிவரை தெய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுகிரகத்துடனும் சிரித்த முகத்துடனும் காணப்பட்டார். இரது வாழ்வு ஒரு இலட்சிய தாயாகவே உருவகிக்க முடியும். தான் பெற்று வளர்த்த பிள்ளைகளுடன் மருமக்களாகக் கிடைத்த ஈஸ்பரநாதன் ஜெயன் வளர்மதி, பன்னீர்ச் செல்வன் ஆகியோருடன் பேரப்பிள்ளைகளான சஞ்சீவன், வில்லியம் சிவன், இனேஷ் ஆகியோரின் நல்வாழ்வை பார்த்தும், அறிந்தும் மிக நிம்மதியான வாழ்வுடன் ஏற்பட்ட நோய்கடு இந்தியாவரை சென்று அதிஉயர் வைத்திய சேவையைபெற்றுக் கொண்டமையால் மனநிறைவு பெற்றார்.

சாந்தமான முகம் அதிலே நிலையாகக் குடி கொண்டிருந்த அந்தப்புன்முறுவல், சுறுசுறுப்பான நடை, அதிலே குடி கொண்டிருந்த ஆரோக்கிய வாழ்வு, இனிய பேச்சு, அதிலே பிறர் கற்றுக்கொள்ளக்கூடிய ஆக்க பூர்வமான கருத்துக்கள், நெற்றி நிறைய குங்குமம், அதிலே பிள்ளையார் மீது அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை, ஒழுங்கான ஒழுக்க வாழ்வு இவை எல்ாவற்றையும் எல்லோர் மனதிலும் என்றும் நிலையாக விட்டு, இறைவனின் பாதாரவிந்தங்களில் கலந்து தெய்வமான அன்னாரின் நினைவுகள் காலமுள்ளவரை நிலைத்திருக்கும்.

'தக்கார் தகவிலர் என்பது
அவரவர் [redacted] எச்சத்தால் காணப்படும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனரின் இரங்கல் செய்தி

நமது சுற்றத்தில் சுறுசுறுப்பாக இயங்கி மூத்தவர்களில் ஒருவராகிய நமது மைத்துனி 'பரமேசின் மரணம்' நம்மை எல்லாம் துயரக் கடலில் ஆழ்த்தி விட்டது. தாம் வாழந்த காலத்தில் பல்வேறு பொறுப்புக்கள், சவால்கள் ஆகியவற்றையெல்லாம் சளைக்காது சமாளித்து வெற்றி கண்ட பரமேஸ் ஈற்றில் தம்மை தாக்கிய கொடூர நோயின் பிடியிலிருந்து தப்ப முடியவில்லையே என்பதை நினைக்கும்போதுதான் கவலை ஏற்படுகின்றது. இளமையிலே அன்னையை இழந்து, தம் பிள்ளைகளுக்காகவே தனது சுகபோகங்களையெல்லாம் மறந்து வாழ்ந்த அருமைத் தந்தையின் அரவணைப்பிலே வளர்ந்து ஏனைய சகோதரங்கள், பெரிய குடும்பத்தின் பொறுப்புகளையெல்லாம் பக்குவமாக நிறைவேற்றியவர். தனது சகோதர, சகோதரிகள் எல்லோருக்கும் நிழல்மரமாக நின்றவர். தம்மை நாடிவந்த சுற்றத்தாருக்கும் பிறருக்கும் ஆவண செய்தவர்.

திருமண வாழ்விலும் கணவர் பிள்ளைகள் ஆகியோருக்கும் ஆற்றவேண்டிய பணிகளைக் குறைவின்றிச் செய்தவர். இப்பணிகள் எல்லாம் சரிவர நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போதுதான் கொடிய நோயின் தாக்கத்திற்கு உள்ளானார். நோய் குணமடைய எவ்வித குறையுமின்றிப் பூரண சிகிச்சை அளிக்கப்பட்:டு வந்தது. இவரின் தேவைகள் யாவும் மிகவும் திருப்திகரமான முறையில் நமது சகோதரனாலும் பிள்ளைகளாலும் பூத்திசெய்யப்பட்டும் வந்தன. 'வாழந்தது போதும் இணி என் கழலையே நீ சாரும் என்ற ஆண்டவனின் கட்டளையாற் போலும் பரமேஸ் நம்மிடமிருந்து மறைந்து விட்டார், எவ்வாறாயினும் நிறைவுடன் வாழ்ந்த அவருக்கு ஆண்டவனின் கழலை அடைய இது நல்ல நேரம் போலும் என நாம் திருப்தியடைகின்றோம்.

கலாநிதி. சி.க. சிற்றம்பலம்.
வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்
மனைவி பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள வாழ்வு

நீண்ட கால அன்னிய தேச வாழ்வை தற்காலிமாகமேனும் முடிபுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஒரு திடம் கொண்டு இவ்வாண்டு இலங்கைக்கு வந்தேன். ஆனால் எமது சொந்தக் கிராமத்துக்குப் போய் சுற்றஞ்சூழலைப் பார்க்கப்பலதடைகள். இத்தடைகளையெல்லாம் தாண்டும் வரை என் தாய்க்குச் சமனான ஒருவரைப் பார்த்துத் திருப்தி அடைவோம் என்று திடங் கொண்டு கொழும்பில் இருந்த திருமதி பரமேஸ்வரி மகேந்திரம் அவர்களின் வீட்டுக்குப் போனேன். அங்கு நான் தேடிப்போன திருவுருவின் ஆத்மாவைத் தான் கண்டேன். அன்பின் உருவைக் கண்டேன். சத்தியத்தின் உருவைக் கண்டேன். முகப் பொலிவின் மறு உருவை, தன் வாழ்வைப் பூரணப்படுத்திய திருப்தியில் திளைத்த தெய்வீகத் திருவுருவைக் கண்டேன். ஆனால் சுறுசுறுப்புடனும் நம்பிக்கையுடனும் கூடிய குளிர்ச்சியான என் மனதில் படிந்த தோற்றத்தைக் காணமுடியவில்லை. இலண்டனில் இருக்கும் அவரின் அன்பு மகன் சதீஸ் இடம் இருந்து நெஞ்சம் நிறைந்து வழிய யான் கொண்டு வந்த புதினங்களை அவரிடம் சொல்ல அடுத்து மூன்று பகல் பொழுதை என்னையறியாமலே கழித்துவிட்டேன். என்மூலம் தன் மகனைக் கண்டு காய்ந்து கொடிபோல் ஆகிவிட்ட அவரின் உருவில் புது மெருகேறியது என நான் நம்புகின்றேன்.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மானிப்பாயில் என்னுடன் நம்பிக்கையுடன் பகிர்ந்து கொண்ட ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமான வார்த்தைகள் என்பதை நாளுக்கு நாள் உணர்ந்து கொண்டு இருக்கிறேன். காலசூழ்நிலையால் துடிப்பான இளைஞர்கள் எல்லாம் பாதைகளைத் தாமே மாற்றிக் கொண்டு தெறிகெட்டுப் போன நேரம் தன் அன்பு மகன் சதீஸை பாடசாலை நேரம் தவிர்ந்த பெரும் பொழுதை எங்கள் சூழலில் வளர விட்ட அன்னையின் நம்பிக்கையை எண்ணி மனநிறைவும் பெருமையும் கொள்கின்றேன். நான் சிலகாலம் அரச திணைக்களமென்றில் வேலைசெய்தபோது மானிப்பாய் பகுதியின் நிலஅளவையாளர் (உலாந்தா) திரு து. மகேந்திரன் அவர்களுடன் பல காணிகளை அளவீடு செய்யச் சென்றபோது ஏற்பட்ட நெருக்கம் அவர்களிக் குடும்பத்துடன் எம்மை மேலும் அபிமானம் கொள்ள வைத்துவிட்டது.

மூத்த மகள் அனுஷா, மகன்மார் குலேந்திரன், சதீஸ்கரன், விஜேந்திரன், மகள் சஞ்சிதா ஆகியோருக்காக அவர்கள் கருப்பெற்ற நாள்முதலாக தன் காயத்தைப் படிப்படியாக உருக்கி அவர்களின் வாழ்வு சுடர் விடவேனும் என்று தன்னையே திரியாக்கி கரைந்துபோன அம்மையாரின் வாழ்வை எண்ணிப் பார்க்கின்றேன். தன் பிள்ளைகளுக்கு ஏதும் இடர் வருங்கால் அவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திட அவர் முனையும் வேகத்திலும் விவேகத்திலும் சாட்சாத் துர்க்கை அம்மனின் அவதாரமாகவே அவரை நான் கண்டேன். காலவெள்ளத்தில் அடியுண்டு போக இருந்த ஒரு மகனை மீட்டெடுத்து வெளிநாடொன்றில் உயர்கல்விக்கு அனுப்ப அவர் களம் இறங்கி வெற்றியுடன் மீண்ட வீரம் எமது பகுதியில் நீங்காத நினைவு.

வந்த நோயினால் நாளுக்கு நாள் கரைந்துகொண்டு இருந்த போது பலமுறை தனித்தும் துணைவியுடனும் பலமைல் கடந்து வந்து உடன்இருந்து வசதிகள் பல செய்து மனநிறைவைச் செய்த மூத்தமகன் குலேந்திரனின் நினைவுகளுடனும் தாயின் தெய்வீக ஈடுபாடுகளின் வாரிசாக பிரதிஉரு எடுத்த மகள் அனுஷாவுக்கு வவுனியாவில் வேலை, மனை, குடும்பம், மகன் சஞ்சீவன், கொழும்பில் அன்னையும் பிதாவும் இவர்களிடையே ஓடிஓடி உழைத்து உரமேறிய முகங்கோணாத சேவையால் பரிவுடன் கூடிய மனநிறைவுடனும் கடும் உழைப்புக்கு உரிய பயனைப் பெற்று பிரான்ஸ் நாட்டில் இருந்து நினைத்த நேரமெல்லாம் வந்து பணிகள் பலசெய்த மகன் விஜேய்யால் அடைந்த அளவிலா மனநிறைவுடனும் கைப்பிள்ளையுடன் அன்னையின் பணியும் தவிர்க்கமுடியாதது என்ற திடத்துடன் கனடா இருந்து வந்து கூட இருந்து தன்பணி செய்து மீண்ட மகள் சஞ்சிதாவால் அடைந்த பெருமையால் நெஞ்சம் நிறைந்த நினைவுகளுடனும் மழலைப்பிராயத்தில் இருந்த காலம் தொட்டு அன்னையின் சேவையே திருப்தி என வாழ்ந்து அளவிலா நிதியை அன்னைக்கு காணிக்கையாக்கி தனி வாழ்வை அமைத்த பின்னும் தன் பணிசெய்த சதீஸின் பால் கொண்ட தனிப்பாசத்தின் நினைவுகளுடனும் இப்பிறவியில் மட்டுமல்லா இன்னும் பலபிறவிகளுக்கும் வேண்டிய உதவியெல்லாம் செய்து என்னைச் சாந்திப்படுத்தி விட்டார் என் கணவர் என்ற நிம்மதியுடனும் இவ்வுலக வாழ்வில் திருப்தி கொண்டு இறையடி சேர நல்லநேரம் வந்துவிட்டது என்று என்னை நோக்கி விளித்த அந்த அம்மையாரின் முகம் என் நீங்காத நினைவுதான். அவரின் மன உணர்வை யான் கேட்க நான்செய்த பாக்கியமே எனக்குப் பெரும்பேறு.

சுமார் அறுபத்தொரு ஆண்டுகள் இப்பூமியில் வாழ்ந்து தன்குடும்பத்துக்காக தன்னையே ஈந்துபோனதுடன் எல்லோர் மனதிலும் நிலையான இடத்தைப் பிடித்த அம்மையாரின் பிடி சாம்பல் கங்கையிலே சங்கமமாகும் புனிதவேளையில் எம்நெஞ்சத்துருகும் கண்ணீரையும் சேர்த்துக்கரைத்திடுவோம்.

*சாந்தி.*

**ந. க. கௌரி.**
*09–09–1999*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# விநாயகர் வணக்கம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

ஔவையார் அருளிய

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெஞ் ஞான
அற்புத மீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை யாட் கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளித்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டா ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங்காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தி

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முக்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள் வெளியிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்

எல்லை இல்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள் வழிகாட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்திக விநாயக விரைகழல் சரணே

*திருச்சிற்றம்பலம*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாருமறிகிலார்
அன்பே சிவமாவது யாருமறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

# இராமலிங்க சுவாமிகளின் திரு அருட்பா

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந்தாலும்
நற்ற வந்தவர் உள்ளிருந் தோங்கும்
நமசி வாயத்தை நான்மற வேனே.

# பட்டினத்தடிகளின் திருப்பாடல்கள்

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்
செய்யுந் திருவெற்றியூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமெ.

# திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகியளவிலா வளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாவேக மாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்த சுவாமிகளின்

## தேவாரப் பதிகங்கள்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங் கீழ்
உடையுங் கொண்ட உருவமென் கொலோ.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மங்கையர்க் கரசி வளர்வர்கோன் பாவை
வரிவளைக் கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டி மாதேவி பணிசெய்து
நாள்தோறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு சுவாமிகளின்
## தேவாரப் பதிகங்கள்

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
எற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியேன்
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழன்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோவில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி சுவாமிகளின்
## தேவாரப் பதிகங்கள்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக்காளாயினி அல்லேன் எனலாமே.

அந்தணாள னுன்னடைக்கலம் புகுத
அவளைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் னாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன் மற்றென்னடியாயென விலக்குஞ்
சிந்தையால் வந்துன்றிருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே.

அங்கத்துறு நோய்கள் அடியார் மேலொழித்தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

நீளநினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளனகண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லும்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் நகரில்
பாவம் வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள்
### அருளிய திருப்பதிகங்கள்

வெள்ளந்தாம் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்ட வேட்டு நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மடடனிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடங் பொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே.

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடைவி றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய்பிழைசெய்வாய் நானே
இதற்கு நாயகமே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்மையே பெருக்கி பொஜதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தான் வாழ்க்கை

ஒருமட மாதும் ஒருவனும்ஆகி இன்பசுகம்தரும்
அன்புபொருந்தி உணர்வுகலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணிதம் மீதுகலந்து -

பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து
புகுந்துதிரண்டு பதுமஅரும்பி கமடம் இதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகள் என்ற -

உருவமும்ஆகி உயிர்வளர்மாதம் ஒன்பதும்மூன்றும்
நிறைந்தும்மடந்தை உதரம் அகன்று புவியில்விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து -

மகளிர்கள் சேனை தரவணையாடை மண்படஉந்தி
உதைந்து கவிழ்ந்து மடமயில்கொங்கை அமுதம்அருந்தி
ஓரறிவு ஈரறிவு ஆகிவளர்ந்து -

ஒளிநகைஊறல் இதழ்மடவாரும் உவந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியில்இருந்து மழலைபொழிந்து
வாஇரு போவென நாமம்விளம்ப -

உடைமணிஆடை அரைவடம் ஆடஉண்பவர் தின்பவர்
தங்களொடு உண்டு தெருவில் இருந்துபுழுதி அளைந்து
ஆதடிய பாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே -

உயர்தரு ஞான குருஉபதேசம் முத்தமிழின்கலையும்
கரைகண்டு வளர்பிறை என்றுபலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து -

மயிர்முடிகோதி அறுபதநீல வண்டிமிர் தண்தொடை
கொண்டைபுனைந்து மணிபொன்இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க -

மதனசொருபன் இவன்என மோக மங்கையர்கண்டு
மருண்டு திரண்டு வரிவிழிகொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர்போவது கண்டு -

மனதுபொறாமல் அவர்பிறகோடி மங்கல செங்கல
சந்திகழ் கொங்கை மருவமயங்கி இதழ்அமுதுண்டு
தேடிய மாமுதல் சேரவழங்கி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுதலாகி முதுபொருளாய் இருந்த தனங்களும்
வம்பில்இழந்து மதனசுகந்த விதனம், இதென்று
வாலிப கோலமும் வேறு பிந்து -

வளமையும்மாறி இளமையும்மாறி வன்பல்விழுந்துஇரு
கண்கள்இருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வரதவிராத குரோதம் அடைந்து -
செங்கையினில் ஓர்தடியும், ஆகியே -

வருவதுபோவது ஒருமுதுகூனும் மந்தியெனும்படி
குந்திநடந்து மதியும் விழுந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமல்மொழிந்து -

துயில்வரும் நேரம்இருமல் பொறாதுதொண்டையும் நெஞ்சும்
உலர்ந்துவறண்டு துகிலும் இழந்துசுணையும் அழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கலியுகமீதில் இவர்மரியாதை கண்டிடும்என்பவர்
கஞ்சலம் மிஞ்சகலகல என்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து -

தெளிவும்இராமல் உரைதடுமாறி சிந்தையும் நெஞ்சமும்
உலைந்துமருண்டு திடமும்உலைந்து மிகவும் அலைந்து,
தேறிநல் ஆதரவு ஏதெனநொந்து -

மறையவன்வேதம் எழுதியவாறு வந்ததுகண்டமும்
என்றுதெளிந்து இனிஎனகண்டம் இனிடிஸயெனதொந்தம்
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற -

கடன்முறை பேசும்என உரைநாவுறங்கி விழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும்நேரமே -

வளர்பிறைபோல எயிறும்உரோமமும் சடையும்சிறு
குஞ்சியும்விஞ்ச மனதும் இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல் யமதூதர்கள் வந்து -

வலைகொடுவீசி உயிர்கொடுபோக மைந்தரும்வந்து
குனிந்தழநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரே இவர்காலம் அறிந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையவர்காணும் எனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்தர் இடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும் என்று -

பலரையும்ஏவி முதியவர்தாமிருந்த சவம்கழுவும்
சிலரென்று பணிந்துகில்தொங்கல் களபணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை -

வரிசை கெடாமல் எடுமெனஓடி வந்திளமைந்தர்
குனிந்துசுமந்து கடுகிநடந்து, சுடலை அடைந்து,
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து -

விறகிடைமூடி அழல்கொடுபோட வெந்துவிழுந்து
முறிந்துநிணங்கள் உருகிஎலும்பு கருகிஅடங்கி
ஓர்பிடிநீறும் இலாத உடம்பை -
நம்பும் அடியேனை இனி ஆளுமே!

பட்டினத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# சிவபுராணம்



நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல் விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலோடு நெய்கலந் தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்றதோற்றச் சுடரொளியாய் சொல்லாத
நுண்ணுர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்

ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்
ஏது பயம் இனி ஏதுபயம் ஸ்ரீராம ஜெயம் சொல்ல ஏது பயம்
காவல் தரும் ஸ்ரீராம ஜெயம் அந்த மாருதிக்கு சொல்லு ராமஜெயம்
ஏதுபயம் இனி ஏதுபயம் ஸ்ரீராம ஜெயம் சொல்ல ஏது பயம்
(ராமஜெயம்)

துன்ப மெல்லாம் அவன் வேரறுப்பான் - துணை
தோள் கொடுத்தே உனை தாங்கிடுவான்
காற்றுமழை புயல் யாவினிலும் - உயிர்
காவலென நின்று காத்திடுவான்
(ராமஜெயம்)

வெற்றிலையால் ஒரு மாலைகட்டு - குளிர்
வெண்ணெய்யினால் அவர் மார்பை தொட்டு
பூஜை செய்தால் வரும் புண்ணியமே - நீ
காத்திருப்பாய் என்றும் கண்ணியமே
(ராமஜெயம்)

கொடுப்பதிலே அவன் வள்ளலம்மா -ராமன்
குடியிருக்கும் திருக் கோயிலம்மா
தங்கம்மா அவன் தங்கமம்மா - மனத்
தைரியமே தரும் கோலமம்மா
(ராமஜெயம்)

அஞ்சனையின் தவப் புத்திரனாம் - அந்த
ஆதிசிவன் கனியானவனாம்
வீசிவரும் குளிர் சந்திரனாம் - தமிழ்
காண்டத்திலே அவன் சுந்தரனாம்
(ராமஜெயம்)

வாயுவென வரும் தெய்வடி - அவன்
வான் மழையே தரும் மேகமடி
மஞ்சள் நிறம் அவன் கண்களடி - அந்த
மாதவ ராமனின் தூதனடி
(ராமஜெயம்)

சந்தனமே அவன் வாசனையாம் - ராம்
நாமமொன்றே அவன் யோசனையாம்
வெற்றிகளே அவன் வேதங்களாம்
சித்தி தரும் திருப் பாதங்களாம்
(ராமஜெயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமுகம் தனைப் பார்திருப்போம் - அவன்
பாதம் சரண் என வாழ்ந்திருப்போம்
தீமைகளை அது தீயிலிடும் - நல்ல
தேன் சுவையாய் மண்ணில் வாழ்வு தரும்

(ராமஜெயம்)

வாலிருக்கும் மணி தானிருக்கும் - அவன்
பேருரைத்தால் பிணியே பறக்கும்
ஆழ்கடலும் அவன் ஏவல் செய்யும் - அந்த
ஏழுலகும் அவன் பேர் புகழும்

(ராமஜெயம்)

சந்திரனாம் நல்ல சேகரனாம் - எங்கள்
சந்திர சேகர சுவாமிகளாம்
மாருதியாம் எங்கள் மாருதியாம் - மண்ணில்
மறு உருவாகிய மாருதியாம்
போற்றி நிற்போம் தினம் போற்றி நிற்போம் - அந்த
புண்ணியன் நாமத்தை போற்றி நிற்போம்
ராமஜெயம் என பாடி நிற்போம் - நித்தம்
வாழ்வில் ஜெயம் கண்டு வாழ்ந்திருப்போம்

(ராமஜெயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரி மலையில் இரவில் நடை சாத்தும் போது பாடப்படும் சாஸ்தா அஷ்டகம்

ஹரிவராஸனம் ஸ்வாமி விச்வ மோஹனம்
ஹரிததீச்வரம் ஸ்வாமி ராத்ய பாதுகம்
அரிவி மர்த்தனம் ஸ்வாமி நித்ய நர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணகீர்த்தனம் ஸ்வாமி மானஸம்
பரணலோலுபம் ஸ்வாமி நர்த்தனாலஸம்
அருண பாஸுரம் ஸ்வாமி பூத நாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே. (சரண)

ப்ரணய ஸத்யகா ஸ்வாமி ப்ராண நாயகம்
ப்ரணதகல்பகம் ஸ்வாமி ஸுப்ரபாஞ்சிதம்
ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தனபரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே. (சரண)

துரகவாஹனம் ஸ்வாமி ஸுந்தராननம்
வரகதாயுதம் ஸ்வாமி வேதவர்ணிதம்
குருக்ரு பாகரம் ஸ்வாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே. (சரண)

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரி நயனப்ரம் ஸ்வாமி திவ்யதேசிகம்
த்ரிதச பூஜிதம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே. (சரண)

பவபயாபஹம் ஸ்வாமி பாவு காவுகம்
புவன மோஹனநம் ஸ்வாமி பூதி பூஷணம்
தவள வாரணம் ஸ்வாமி திவ்ய வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே. (சரண)

களம் ருதுஸ்மிதம் ஸ்வாமி ஸுந்தராननம்
களப கேஸரீஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே. (சரண)

ச்ரிதஜனப்ரியம் ஸ்வாமி ஸுந்தராননம்
ச்ருதிவிபூஷணம் ஸ்வாமி ஜீவனம்
ச்ருதி மனோஹரம் ஸ்வாமி கீதலாலஸம்
ஹரிஹராத்தஜம் ஸ்வாமி தேவமாச்ரயே. (சரண)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

சிவபாலன் அய்யனுக்கு மோகினி பாலனுக்கு
வில்லாளி வீரனுக்கு வீரமணிகண்டனுக்கு
ஆரியங்காவு அய்யனுக்கு அச்சன் கோயில் ஆண்டவர்க்கு
புலிப்பால் கொணர்ந்தவர்க்கு புகழ்குளத்துர் ஐயனுக்கு
சண்டப் ரசண்டருக்கு வீரமணி கண்டனுக்கு
பம்பையில் வாஸனுக்கு சபரிமலை சாஸ்தாவுக்கு
ஜெய மங்களம் நித்ய சுப மங்களம் ஆ.....

ஸ்வாமியே.....சரணமய்யப்பா
ஹரிஹரஸுதனே.....சரணமய்யப்பா

மஞ்சமாதாவே.....சரணமய்யப்பா
வெற்றிவடிவேலன் தம்பியே.....சரணமய்யப்பா
ஸேவிப்பவர்க்கானந்த மூர்த்தியே...சரணமய்யப்பா
கன்னி மாரையும் அய்யன் மாரையும் காத்தருளவேண்டும்
ஸ்வாமியே.....சரணமய்யப்பா.
பஞ்சாத்ரீச்வர மங்களம் - ஹரிஹர
ப்ரேமாக்ருதே மங்களம்
பிஞ்சாலங்க்ருதே மங்களம் - ப்ரணபதாம்
சிந்தாமணே மங்களம்
பஞ்சாஸ்யத்வ மங்களம் - த்ரிஜகுதா
ஆத்லப் ரபோ மங்களம்
பஞ்சாஸ்யோபம மங்களம் - ஹ்ருதிசிரோ
லங்கார ஸன் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACKNOWLEDGMENT

The family members of the late Mrs Parameswary Mahendran express their sincere gratitude and thanks to relatives, Friends and all who attended the funeral, called over at their residence , sent messages of condolence, Floral tributes and all those who helped in numerous ways during our recent bereavement.

***Mr. T. MAHENDRAN,AND IN LAWS Children and Grand Children.***

***No. 16 CLIFFORD PLACE,
COLOMBO - 4.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

எனது துணைவியும் எமது அன்னையினதும் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும். பல வழிகளிலும் குறிப்பறிந்து உதவிகள் பல புரிந்து வெளிநாட்டிலிருந்தும், உள்நாடடிலிருந்தும் தந்தி,கடிதம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்து, மலர்வளயம் சாத்தியும். கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இன்று நடைபெறும் அந்தியேட்டி வீட்டு கிருத்திய கிரியைகளில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் எமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறோம்.

கணவன்
பிள்ளைகள்
மருமக்கள்

*16, CLIFFORD Place,*
*Colombo - 4.*
*12-09-99*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ

துரைரத்தினம் (அமரர்) + சிவகாமிப்பிள்ளை (அமரர்)

சகோதர சகோதரிகள்

மகேந்திரன் + **பரமேஸ்வரி**

அனுஷா + ஈஸ்பரநாதன்
(இலங்கை)
↓
சஞ்சீவன்

குலேந்திரன்+ஜெயன்
(இங்கிலாந்து)
↓
வில்லியம் சிவன்

சதீஸ்கர
(இங்கிலாந்து

ரட்ணம்
+
மகேஸ்வரன்
(அவுஸ்திரேலியா)
↓
சியாமலி + தனபாலசிங்கம்
அருள்நேசன் + விஜயப்பிரபா
நீலவண்ணன் + பாமினி
நமவசியாம்+லலிதா

மகேஸ்வரி
+
உருத்திரமூர்த்தி
(இங்கிலாந்து)
↓
உருத்திரகுமார்
மகேந்திரக்குமார்
+
நோரின் நளாயினி

சரஸ்வதி
+
வர்ணகுலசிங்கம்
(அவுஸ்திரேலியா)
↓
ஷாமினி + கொன்ராட்
சசி
சஞ்சீவ்

செல்வராணி
+
சோமசுந்தரம்
(அசுஸ்திரேலியா)
|
ஸ்ரீதரன்+ காஞ்சனா
ஜெயதரன் + மனோகரி
பாஸ்கரன் + சுலோச்சனா
முரளிதரன் + சிவகாமி
கிரிதரன் + சுகன்யா

ஞானாம்பிகை(அமெரிக்கா)
+
செல்வரட்ணம் (அமரர்)
|
அனுலா + தர்மகுலசிங்கம்
(இங்கிலாந்து)
சஜிதரன் + சுபாஷினி
(அமெரிக்கா)
விஜிதரன் + சிவகாமசுந்தரி
(இங்கிலாந்து)
புவிதரன் + சுசிலாதேவி
(இங்கிலாந்து)
அமரா + யோகரட்ணம்
கௌரி + சிவநேசன்
(அமெரிக்கா)
மித்திரன் + ரதி
(இலங்கை)

ஸ்ரீ பத்மநாதன் (அமரர்)
பத்மாவதி (இலங்கை)
|
அருந்ததி + ஸ்ரீபத்மானந்ததா(அமரர்)
குமுதினி + ஸ்ரீபாஸ்கன் (இலங்கை)
விஜயராகவன் + மீரா (ஜெர்மனி)
விக்னேஸ்வரன் (அமரர்)

மனோரஞ்சிதம் (கனடா)
+
நாகேந்திரா (அமரர்)
|
டிலிப் சத்தியேந்திரா + பத்மினி
கல்பனா ஷாமினி + ராஜ்குமார் சு

பு

தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சிதம்பரப்பிள்ளை + பார்வதி
(அமரர்) (அமரர்)

சகோதர சகோதரிகள்

யன்

சதீஸ்கரன்+வளர்மதி
(இங்கிலாந்து)

விஜயேந்திரன்
(பிரான்ஸ்)

சஞ்சிதா +பன்னீர்செல்வன
(கனடா)
↓
இனேஷ்

சரஸ்வதி
+
ர்ணகுலசிங்கம்
(அவுஸ்திரேலியா)
↓
ஷாமினி + கொன்ராட்
சசி
சஞ்சீவ்

சிவராஜசிங்கம்
+
ஹெல்கா
(இங்கிலாந்து)
↓
மார்க்
மைக்கல்

புவனேஸ்வரி
+
சிற்றம்பலம்
(இந்தியா)
↓
கலா
கனேஷன்

ஞானேஸ்வரி
+
ஸ்ரீஸ்கந்தபதி
(அவுஸ்திரேலியா)
↓
கார்த்திகாயினி
கார்த்தீபன்

னோரஞ்சிதம் (கனடா)
+
ாகேந்திரா (அமரர்)
ஷிலிப் சத்தியேந்திரா + பத்மினி
ல்பனா ஷாமினி + ராஜ்குமார்

அருளானந்தன்
+
புஸ்பவதி (கனடா)
குமரன் நரேந்திரன்(நோர்வே)
சுபாங்கினி + அசோக்குலேந்திரன்
ஹரிதரன்
(கனடா)

பத்மாவதி(ஜேர்மனி)
+
சந்திரபால் (அமரர்)
சங்கர் சிவசங்கர்
பத்மசுலோஜினி+ குமரசந்திரன்
கிரிஸ்சாந்தி + புவனேஸ்வரன்

சீதாலட்சுமி (கனடா)
+
குமரேசன் (அமரர்)
பிரியதர்ஷினி + யதூர்ஷன்
அரவிந்தன் (இலங்கை)

தர்மேஸ்வரி + ஸ்கந்தகுமார்
(இலங்கை)
யாழினி (அவுஸ்ரேலியா)
மீரா (இலங்கை)
ஜனார்த்தனன் (இலங்கை)

விமலாதேவி (கனடா)
+
சீவரட்ணம் (அமரர்)
ரமணன் + ராதா (இங்கிலாந்து)
சிவாஞ்ஜலி + முரளி (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print House, 113, Jampettah Street, Colombo - 13. Tel: 431145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org